**செய்தி வெளியீடு எண்: 863** **நாள்: 27.11.2018**

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ஆவணப்பதிவிற்கு பொதுமக்கள் செல்லும்போது தெரிந்துகொள்ள வேண்டிய மூன்று முக்கிய விவரங்கள்.</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.2.2018 அன்று பதிவுத்துறைக்கான ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான ஸ்டார் 2.0 திட்டம் துவக்கிவைக்கப்பட்டது. இத்திட்டத்தின் வழியாக இதுவரை **19,20,174** ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு**ள்ளது**.

பொதுமக்கள் ஆவணப்பதிவிற்கு நாள் மற்றும் நேரம், **30** நாட்கள் வரை இணையதளம் வழியாக முன்பதிவு செய்துகொள்ளலாம். முன்பதிவு செய்த நாள் மற்றும் நேரத்தில் ஆவணம் தாக்கல் செய்யப்படும்போது சார்பதிவாளரால் சரிபார்க்கப்பட்டு கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்படும்.

1. ஆவணம் முறையாக பதிவு செய்யப்பட்டு அதற்கான ரசீது சார்பதிவாளரால் கையொப்பமிடப்பட்டு ஆவணதாரருக்கு வழங்கப்படும். அதில் ஆவணம் எப்போது திரும்ப வழங்கப்படும் என்ற விவரம் அச்சிடப்பட்டிருக்கும். ஆவணம் திரும்பப்பெற அத்தாட்சிபெற்றவர் ரசீதில் அச்சிடப்பட்ட தேதியில் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் சென்று அசல் ஆவணத்தை திரும்ப பெற்றுக்கொள்ளலாம்.

2. ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட பட்டா போன்ற விவரங்கள் சரிபார்க்கவேண்டியிருக்கும்போதும் தேவையான முத்திரைத் தீர்வை செலுத்தாதபோதும் மற்றும் இன்னும் பிற வரையறுக்கப்பட்ட காரணங்களுக்காகவும் ஆவணம் நிலுவை ஆவணமாக பதிவு செய்யப்பட்டு நிலுவைக்கான காரணம் ரசீதில் அச்சடித்து சார்பதிவாளரால் கையொப்பமிடப்பட்டு ஆவணதாரருக்கு வழங்கப்படும். நிலுவைக்கான காரணம் சரி செய்யப்பட்டவுடன் ஆவணம் முறையான ஆவணமாக பதிவு செய்யப்பட்டு ஆவணதாரருக்கு திரும்ப வழங்கப்படும்.

3. பதிவுச் சட்டம், பதிவு விதிகள், அரசாணைகள் மற்றும் பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கைகளில் கூறியுள்ளபடி தேவையான விவரங்களுடன் ஆவணம் தாக்கல் செய்யப்படாத நிலையில் ஆவணப் பதிவு மறுக்கப்படும். இவ்வாறு பதிவு மறுக்கப்படும் நிகழ்வுகளில் என்ன காரணத்திற்காக பதிவு மறுக்கப்பட்டது என்ற விவரத்துடன் பதிவு மறுப்புச் சீட்டு அச்சிடப்பட்டு சார்பதிவாளரால் கையொப்பமிடப்பட்டு ஆவணதாரருக்கு வழங்கப்படும். இந்நிகழ்வுகளில் ஆவணதாரர்கள் பதிவு மறுப்புச் சீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களை சரி செய்து மீண்டும் ஆவணத்தினை பதிவு செய்துகொள்ளலாம்.

எனவே, ஒரு ஆவணம் பதிவுக்கு அனுமதிக்கப்பட்டு ஆவணம் முறையாக பதிவு செய்யப்பட்டாலோ அல்லது நிலுவை வைக்கப்பட்டாலோ அல்லது ஆவணம் பதிவுக்கு மறுக்கப்பட்டாலோ எந்த நிகழ்வாயினும் அதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு சார்பதிவாளரால் கையொப்பமிட்டு ஆவணதாரருக்கு

வழங்கப்பட வேண்டும். அவ்வாறின்றி சார்பதிவாளர் வாய்மொழியாக ஆவணப்பதிவை மறுத்தால் 1800-102-5174 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ள பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**